

கழகத் தலைவர், முதல்வர் அவர்களின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு ஆலந்தூர் தெற்கு பகுதியில் உள்ள 163, 164, 165, 166 ஆகிய வட்ட தி.மு.க. சார்பில் 3000 நபர்களுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறுசுவை உணவுகளை வழங்கினார். அருகில் மண்டல குழுத் தலைவர் என்.சந்திரன், ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ப.குணாளன், வட்டச் செயலாளர்கள் டி.ஏசுதாஸ், கே.ஆர்.ஜெகதீஸ்வரன், ஜெ. நடராஜன், இ.உலகநாதன், அ. வேலவன் ஆகியோர் உள்ளனர்.



கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 73 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருவாலங்காடு கிழக்கு ஒன்றியம் திருவாலங்காட்டில் F.C.C, TVG நடத்தும் மாபெரும் கிரிக்கெட் போட்டி ஒன்றிய கழகச் செயலாளர் எஸ்.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது இதில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ திருவள்ளுவர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் ஆகியோர் கிரிக்கெட் போட்டியை தொடங்கி வைத்து வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகள் கோப்பை வழங்கினார் உடன் நிர்வாகிகள் ஜெயபாரதி. களம்பாக்கம், எம்.பன்னீர்செல்வம், காஞ்சிபாடி சரவணன், ஏ.பி.செந்தில்குமார், ஜி.ரமேஷ், தினகரன், நிலாவதி சீனிவாசன், கலைவாணன், சதீஷ் , சிவகுமார் , ரவனய்யா, மற்றும் திமுக நிர்வாகிகள் பலர் உள்ளனர்

# சென்னை மேற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!



கழகத் தலைவர் -முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலின்படி சென்னை மேற்கு மாவட்ட கழக ஆலோசனைக்கூட்டம் இன்று (02.03.2026) மாலை 6.00 மணியளவில் (எண்.20/32) காம்தார் நகர் முதல் தெருவில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில், மாவட்ட அவைத் தலைவர் து.விக்டர் தலைமையில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட பகுதி கழக செயலாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் வட்ட கழக செயலாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : கழக ஆக்கப்பணிகள்

**நே.சிற்றரசு**
மாவட்டச் செயலாளர், சென்னை மேற்கு

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா!!

# திருவொற்றியூர் மேற்குப் பகுதி தி.மு.க. சார்பில் எழுச்சிமிகு கொண்டாட்டம்!

## மாதவரம் எஸ், சுதர்சனம் முன்னிலை! வை. ம.அருள்தாசன் ஏற்பாடு!

சென்னை,மார்ச்.2-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு. க.ஸ்டாலின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ அவர்கள் வழிகாட்டுதலில் திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக சார்பில் அனைத்து வட்டங்களில் உள்ள கொடிக்கம்பங்களிலும் கழக இரு வண்ணக் கொடி ஏற்றி பொதுமக்களுக்கும் துப்புரவு பணியாளர்களுக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் ஏற்பாட்டில் நேதாஜி நகரில் அமைந்துள்ள கொடிக்கம்பத்தில் கழக இரு வண்ணக் கொடி ஏற்றி விண்ணை பிளக்கும் வகையில் கழகத் தலைவர் மாண்புமிகு முதல்வர் வாழ்க என்று கோஷமிட்டு பொது மக்களுக்கும், துப்புரவு பணியாளர்களுக்கும் இனிப்புகள் வழங்கி வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் ஏற்பாட்டில் விம்கோ நகரில் அமைந்துள்ள ரெஹோபாத் ஆதரவற்றோர் முதியோர் இல்லத்தில் மதியம் 12 மணியளவில் அறுசுவை உணவு மற்றும் 100 கும் மேற்பட்டோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

தொடர்ந்து தமிழ்நாடு முதல்வர் நீடு வாழ அனைத்து மூத்தோர்களாலும் பிரார்த்தனை செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் பகுதி பொருளாளர் எம்.வஜ்ர வேல்இ பிரதிநிதிகள் எம். சந்திரகுமார், ந.ராம்குமார், எஸ்.சேது, வை. சின்னையன், புண்ணியமூர்த்தி, கே. செந்தில்குமார், வை.பாலசுந்தரம், கே. சரவணன், எஸ். மகேஷ்குமார் எஸ்.ராஜேஷ், ஆர்.நரேன்குமார், எம்.ராமு, எம். பாபு,ஜெ.மாரி , பா.அஜித், முத்துமுருகன், எஸ்.யுவராஜ், அழகிரி, வை. சி.பிரபாகரன், பா.யோகித்,டைட்டஸ் மற்றும் மாவட்ட,பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் திரளாக பங்கேற்றனர்.

# செஞ்சியில் 5000 பேருக்கு நல உதவிகள் - செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

செஞ்சி. மார்ச். 2-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்ற தொகுதி சார்பில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு செஞ்சி மத்திய ஒன்றியம் மழவந்தாங்கல், கெங்கவரம் ஆகிய ஊராட்சியில் அரிசி உள்ளிட்ட நல திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிநடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

கெங்கவரம்ஊராட்சி மன்ற தலைவர்மகேஸ்வரி பொற்செழியன்,ஒன்றிய கவுன்சிலர் சத்தியா கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில்விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்து கொண்டு சிறப்புரையாற்றி மழவந்தாங்கல், கெங்கவரம்ஆகிய ஊராட்சிகளில் உள்ள 5000 நபர்களுக்கு அரிசி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கிசிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில்செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன் மாவட்ட கவுன்சிலர் அகிலா பார்த்திபன், ஒன்றிய நிர்வாகிகள்வாசு, திருநாவுக்கரசு, அய்யாதுரை, ஊராட்சி நிர்வாகிகள் மழவந்தாங்கல்திருமாவளவன் அண்ணாதுரை முருகன், காண்டிபன், செல்வம், அய்யாக்கண்ணு, சிங்காரவேல், கதிர்வேல் கெங்கவரம்முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் தமிழ்ச்செல்வி தங்கதுரை, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் குமார், சக்திவேல், நிர்வாகிகள் கணேசன், சங்கர், ரமேஷ் ,சரவணன், அய்யப்பன், லட்சுமணன், டி, கணேசன், இளைஞர் அணி அன்பு தொண்டரணி மோகன் பெரியார், உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



பம்மல் தெற்கு பகுதி தி.மு.க.சார்பில் உறுதிமொழி ஏற்று முதல்வரின் பிறந்தநாளை முன்னிட்டு பகுதி செயலாளர் பம்மல் வே.கருணாநிதி ஏற்பாட்டில் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ கழக இருவண்ண கொடியேற்றி 1500 நபர்களுக்கு உணவு வழங்கினார். இதனை தொடர்ந்து பம்மல் தெற்கு பகுதிக்கு உட்பட்ட 5,6,7,8,10,11,12 ஆகிய வார்டுகளில் வட்ட கழக செயலாளர்கள் ஏ.அனிஸ்டன், வி.எஸ்.ஜெகநாதன், மு.இன்பசேகர், என்.காந்தி, எச்.முகமது அப்பாஸ், எம்.சுகுமாரன், பி.ஸ்ரீதர் ஆகியோர் ஏற்பாட்டில் வட்டங்கள் தோறும் கழக இருவண்ண கொடியேற்றி இனிப்பு,நலதிட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது.



முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை நெற்குன்றம்,145 வது வட்ட செயலாளர் ப.ஆலன் தலைமையில் கழக கொடியோற்றி 1000 நபர்களுக்கு மதிய அறுசுவை உணவு மற்றும் இனிப்பு வழங்கப்பட்டது.பகுதி அவைத் தலைவர் ஆர்.கர்னல்,145 வது வட்டத்திற்கு உட்பட்ட அனைத்து நிர்வாகிகள் கழகத் தோழர்கள் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

## ‘பாரத ரத்னா’ விருது வழங்க வேண்டும்! எளிமைச் செம்மல்

# நல்லகண்ணுவின் வெற்றிடத்தைக் காலத்தாலும் நிரப்ப இயலாது!

## விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன் அறிக்கை!



**சென்னை, மார்ச்.2 -**

**எளிமை செம்மல் ‘ஆர் என்கே’ அவர்களின் மறைவால் உருவாகியுள்ள வெற்றிடத்தைக் காலத்தாலும் இட்டுநிரப்ப இயலாது! என்றும் இந்திய ஒன்றிய அரசு அவருக்கு ‘பாரத ரத்னா’ விருது வழங்கிச் சிறப்பிக்க வேண்டும்! என்றும் வி.சி.க. தலைவர் தொல் திருமாவளவன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**

இதுகுறித்து அவரது இரங்கல் செய்தி வருமாறு:

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவரும் இந்திய விடுதலைப் போராட்ட வீரருமான தகைசால் தமிழர் அய்யா ஆர்.என்.கே அவர்களின் மறைவு மிகுந்த துயரமளிக்கிறது. அவர் நூறாண்டுகள் வாழ்ந்து நிறைவாழ்வை அடைந்தவர் என்றாலும், அவரது மறைவு நெஞ்சைக் கனக்கச் செய்கிறது.

மாபெரும் கொள்கை குன்றம் சரிந்தது!

மகத்தான எளிமையின் சிகரம் சாய்ந்தது! அரசியல் தூய்மையின் பேரொளி மறைந்தது! பாட்டாளிகளின் உற்றத் தோழரின் மறைவு எவராலும் ஈடுசெய்ய முடி யாதது! உழைக்கும் மக்களின் பாதுகாப்புப் பேரரணாக வாழ்ந்து மறைந்த மாமனிதர் தோழர் நல்லக்கண்ணு அவர்களுக்கு எமது செம்மாந்த வீரவணக்கம்!

அவருடைய வயதும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வயதும் ஒன்றே என்பது அவருக்கு வாய்த்த தன்னியல்பாக அமைந்த ஒரு மகத்தீன பெருமையாகும். அவர் இந்திய விடுதலை போராட்டத்தில் பள்ளிப் பருவத்திலேயே பங்கேற்று சிறைபட்டு ஈகம் புரிந்தவர். ஆங்கிலேய வல்லாதிக்க ஆட்சியாளர்கள் அவருக்குச் சொல்லொணா கொடுமைகளை இழைத்தனர். மிடுக்கான தோற்றம் கொண்ட அவரது மீசையைத் தீயால் சுட்டுப் பொசுக்கிய கொடூரத்தையும் அரங்கேற்றினர். அதிலிருந்து அவர் மீசை வைப்பதைக் கைவிட்டார் என்பது நம் கண்ணீரை உகுக்க செய்யும் குரூரமான வரலாறாகும்.

இந்தியப் பொதுவுடைமை கட்சியில் இணைந்து களமாடிய அவர்மீது “நெல்லை சதி வழக்குப்” புனை யப்பட்டது. அதனையொட்டி சிறைப்படுத்தப்பட்ட அவர் சந்தித்த அடக்கு முறைகள் ஏராளம். சாதி, மதம் கடந்து உழைக்கும் மக்களை அமைப்பாக்கி அவர்களை அரசியல்படுத்தி வர்க்க விடு தலைக்கான புரட்சியை முன்னெடுக்க வேண்டுமென்பதில் தீவிரம் காட்டியவர்.

எளிமையான பொது வாழ்வு; வலிமையான போர்க்குணம்; உறுதியான கொள்கை பிடிப்பு; பக்குவமான அணுகு முறை போன்றவையே அவரது அடையாளங்கள் ஆகும்.

விடுதலைச் சிறுத்தைகளின் மீது பேரன்பைப் பொழிந்தவர். எப்போதும் என்னைத் தட்டிக் கொடுத்து ஊக்கப்படுத்தியவர். சிறுத்தைகளின் “அம்பேத்கர் சுடர்” விருதினைப் பெற்றுக் கொண்டு எமக்குப் பெருமை சேர்த்தவர்.

“தகைசால் தமிழர்” என தமிழ்நாடு அரசால் முதலமைச்சர் அவர்களால் பாராட்டப்பெற்ற பெருந்தகை ஆவார்.

பொதுவாழ்வில், குறிப்பாக தேர்தல் அரசியல் களத்தில் இத்தகைய ‘தூய்மைமிகு பேராளுமை’ இனி எப்போது வாய்க்கும் என்னும் ஏக்கமே மிஞ்சுகிறது. எளிமை செம்மல் அய்யா நல்லக் கண்ணு அவர்களின் மறைவால் அரசியல் களத்தில் உருவாகியுள்ள வெற்றிடத்தைக் காலத்தாலும் இட்டு நிரப்ப இயலாது.

அவரது திருவுடல் அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்படுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது பெரும் ஆறுதல் அளிக்கிறது. இச்சூழலில் தமிழ்நாடு அரசுக்கும் முதல மைச்சருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்திய ஒன்றிய அரசு அவரது ஈகம் நிறைந்த பொதுவாழ்வையும்; தேசத்தின் விடுத லைக்கான அறப்போராட்டத்தில் அவர் ஆற்றிய பங்களிப்பையும் போற்றும் வகையில் அவருக்கு தேசத்தின் உயரிய விருதான ‘பாரத ரத்னா’ விருதினை வழங்கிச் சிறப்பிக்க வேண்டுமென இந்திய ஒன்றிய அரசுக்கு விடுதலைச் சிறுத்தை கள் கட்சியின் சார்பில் வேண்டுகோள் விடுக்கிறோம்.

முதுபெரும் தலைவர் தோழர் ஆர்என்கே அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினர் உள்ளிட்ட உற்றார் உறவினர்களுக்கும் பொதுவுடைமை இயக்கத் தோழர்களுக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கழகத் தலைவர், தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 73– வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு 01.03.2026 நேற்று ஆலந்தூர் தெற்குப் பகுதி 167–வது வட்டத்தில் வட்டச் செயலாளர் ஜெ. நடராஜன் ஏற்பாட்டில், பகுதிச் செயலாளர் என்.சந்திரன் எம்.சி., தலைமையில் நங்கநல்லூரில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து, கழக கொடியேற்றி, தூய்மை பணியாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு இனிப்பு மற்றும் காலை சிற்றுண்டியை 500 நபர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் எம்.எஸ். கே.இப்ராஹிம், சாய் ஜெய்காந்த் பாரதி, ஆர். ஆர்.ஜெயராம் மார்த்தாண்டன், இ. உலகநாதன், டி. ஜேசுதாஸ்,ஏ.ஆர். சரவணா, ஏ. சாலமோன், வாஞ்சிநாதன், எஸ். ஆர்.ரவி, பெருமாள், பாண்டிச்செல்வி, விஜயலட்சுமி, சுந்தர்ராஜன், பாபு, ராஜேஸ்வரி சத்யா, ரமேஷ், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் பகுதி 114அ வட்ட சார்பில் முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களின் 73 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு வட்ட கழக செயலாளர் ஏ.தமிம் அன்சாரி ஏற்பாட்டில் சி.என்.கே. சாலையில் பொதுமக்களுக்கு சேப்பாக்கம் பகுதி கழக செயலாளர் 9வது மண்டல குழு தலைவர் எஸ். மதன்மோகன் அறுசுவை உணவு வழங்கி சிறப்பித்தார்.இந்நிகழ்வில் வட்டத்திற்குட்பட்ட அனைத்து நிர்வாகிகள் கழகத் தோழர்கள் திரளாக பங்கேற்றனர்.



சென்னை மேற்கு மாவட்ட தொழிலாளர் அணி சார்பாக கழகத் தலைவர் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட அமைப்பாளர் எம்.டி.ஆர். சாரதி மணிமாறன் தலைமையில் தொழிலாளர் அணி மாநில துணைச் செயலாளர் எல் பி எஃப்.நா. தமிழ்ச்செல்வன் கொடியேற்றி இனிப்புகள் வழங்கினார் இதில் 110 அ வட்ட செயலாளர் த. குணசேகரன் மாவட்ட அமைப்பாளர் மு. சீனிவாசன் மாவட்ட துணை அமைப்பாளர் நா. நாகராஜ் பகுதி அமைப்பாளர் லாரன்ஸ் சேஷாத்திரி இரா. கதிரவன் மு.சா.பரத்குமார் யமுனா வடிவேல் பிரஸ் மணிகண்டன் வாணி மஹால் சரவணன் ஆர். ஆனந்தன் எஸ்.ராஜேஷ் பி.முனியன் லட்சாதிபதி மகாலிங்கம் மதிபாபு பன்னீர்செல்வம் மணிகண்டன் கண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்..